தேதி. 19.08.2025
OS.No. 66/2024
PW1- பாஸ்கரன், த/பெ. கோவிந்த சாமி

**குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். எனது தாத்தா ஆதிமூலம் பாட்டியின் பெயர் பட்டம்மாள் என்றால் சரிதான். எனது தாத்தா பாட்டிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் கோவிந்த சாமி, முனியம்மாள் ஆவார்கள். எனது தாத்தா ஆதிமூலம் இறந்த தேதி, மாதம் தெரியாது வருடம் 2000ம் ஆகும். எனது பாட்டி எப்போது இறந்தார் என்றால் 2001ம் வருடம் இறந்தார். முனியம்மாள் என்பவர் உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை அவரும் இறந்துவிட்டார். எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2017ம் ஆண்டு இறந்துவிட்டார். முனியம்மாள் அவர்களின் வீட்டுக்காரரின் பெயர் பூங்காவனம். அவர்களின் பிள்ளைகளின் பெயர் சேகர் மற்றும் ஏழுமலை. சேகர் என்பவர் உயிருடன் இருக்கிறாரா என்றால் அவரும் இறந்துவிட்டார். எப்போது இறந்தார் என்றால் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். சேகருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் சரவணன் என்ற மகனும், காயத்திரி என்ற மகளும் உள்ளனர். எனது அப்பா பெயர் கோவிந்தசாமி மட்டுமே கோவிந்தன் கிடையாது. வழக்குச் சொத்தின்  பழைய சர்வே எண் 25/3, புதிய சர்வே எண் 25/4 வழக்குச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் பத்திரம் படி 30 செண்ட் ஆகும். வழக்கு சொத்தை எனது தாத்தா தான் கிரையம் வாங்கினார். எப்போது கிரையம் வாங்கினார் என்றால் மாதம், தேதி தெரியாது வருடம் 1973 ஆகும். எனது தாத்தா வாங்கிய கிரையப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

**குறுக்குவிசாரணை** - அவகாசம் கோரியதன் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்